9th August 1965]

ஐ. ஏ. எஸ். அதிகாரி பதவி நீக்கம்

*123 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) லஞ்ச ஒழிப்பு நடவடிக்கையின் கீழ் இம்மாநிலத்தில் ஐ. ஏ. எஸ். (I.A.S.) அதிகாரி யாரேனும் பதவி நீக்கம் செய்யப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) Yes. An Indian Administrative Service Officer was dismissed from service by the Government of India with effect from 20th January 1965 for passing irregular orders of assignment after accepting illegal gratification in respect of lands of Chokkikulam village situated in Madurai Municipality.

திரு. கரு. சீமைச்சாமி : சாதாரணமாக சிறிய உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்கினால் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் பெரிய ஐ. ஏ. எஸ். உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்கினால் பதவி நீக்கம் மட்டும் செய்யப்படுவதன் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பதவி நீக்கம் மட்டும் செய்யப்படுகிறது என்று கனம் அங்கத்தினர் சொல்வது தவறு. கோர்ட்டிலே தண்டிக்கப்பட்டு பதவியிலிருந்து நீக்கப்பட்டு, அவர்கள் அப்பீல் செய்து இருப்பதால் இதற்கு மேலும் கேள்வி கேட்கவோ, விவரம் கொடுக்கவோ இடம் இல்லை.

Hill Allowance for Gazetted Officers

*124 Q.—SRI S. NANJUNDA ROW : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal under consideration of the Government to grant hill allowance to all the Gazetted Officers working in hill areas in the State ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have sanctioned with effect from 1st March 1965, hill allowance to all Gazetted Officers drawing pay up to Rs. 810 serving in hill stations.

திரு. ஜே. மாதா கவுடர் : எல்லா அதிகாரிகளுக்கும் ஹில் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா ? பள்ளிக்கூடத்தில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் ஹில் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஹில் ஸ்டேஷன்களில் வேலை செய்யும் சர்க்கார் கெஜட் பதிவுள்ள அதிகாரிகள் எல்லோருக்கும் இந்த ஹில் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, ஆசிரியர்களிடமிருந்து அப்படியொரு கோரிக்கை வந்திருக்கிறதா ?

[9th August 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தக் கேள்வி சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் பற்றித்தான் இருக்கிறது. 'கெஜடட் ஆபீசர்ஸ் வொர்க்கிங் இன் ஹில் ஏரியாஸ்' என்று தான் கேள்வியிலேயே இருக்கிறது. மேலும் விவரங்கள் வேண்டும் என்றால் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. ஷேக் அப்துல்லாவின் பராமரிப்பு

* 125 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல்:**
திரு. கோ. சி. மணி:
திரு. எஸ். ஆறுமுகம்:
} **கனம்** முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ள ஷேக் அப்துல்லாவின் பராமரிப்பு இம்மாநில அரசின் கண்காணிப்பில் நடைபெறுகிறதா?

(இ) ஆம் எனில், அதற்காக இம்மாநில அரசுக்கு ஏற்பட்ட செலவு என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) There is no expenditure to the State Government as the entire expenditure is reimbursed by the Government of India.

திரு. வி. எஸ். எஸ். மணி: கோடைக்கானலில் ஷேக் அப்துல்லாவை வைப்பதற்கு ரூ. 60,000 பங்களாவிற்குச் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. இந்தச் செலவு நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்ததா? அல்லது மத்திய அரசாங்கத்தைச் சார்ந்ததா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதனால் ஏற்படுகிற செலவுகளையெல்லாம் மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறது.

திரு. கரு. சீமைச்சாமி: கோடைக்கானலில் இருக்கும் அந்த பங்களா சிவகெங்கை ராஜாவுடையது. அதற்கு 60,000 ரூபாய் செலவு செய்திருப்பதாக பத்திரிகைகளிலே செய்தி பார்த்தோம். அதை வாங்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பத்திரிகைகளைப் பார்த்துக் கேள்வி கேட்பது சரியல்ல. பத்திரிகையிலே வருவதெல்லாம் சரியான செய்தி என்று சொல்ல முடியாது. இப்போது இந்த பங்களாவை வாங்குவதாகவோ அல்லது அதற்காகச் செலவு செய்வதாகவோ உத்தேசம் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர்: ஷேக் அப்துல்லாவை இந்த மாநிலத்திலே வைத்திருப்பதால் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆதலால் அவரை வேறு மாநிலத்திற்கு மாற்றுவதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த மாநிலத்திலே இருந்தால் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று கனம் அங்கத்தினர் கூறுகிறார்கள். நான் அப்படிக் கருதவில்லை. இந்த மாநிலத்திலிருந்து